பக்கங்கள் 18 + 8

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 25 செவ்வாய்க்கிழமை 10.09.2024 | அதிர்வு 40

## தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை விளக்கும் அறிக்கை ஞாயிறன்று



(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# சஜித்துடன்தான் இனிமேல் பேச்சு

## தமிழரசின் உயர் தலைவர்கள் இன்று காலையில் கூடி முடிவு



வவுனியா, செப்டெம்பர் 10

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உத்தேச மத்திய குழுக் கூட்டம் வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மத்திய குழு மீண்டும் கூடாது. மத்திய குழு ஏற்கனவே எடுத்த முடிவை மாற்றத் தேவையில்லை. ஆயினும், கட்சியின் மூத்த தலைவர்கள் மீண்டும் 16 ஆம் திகதியளவில் கூடி கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் ஓர் அறிக்கையை மக்களுக்கு வெளியிட வேண்டும்.

- இப்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் இன்று வவுனியாவில் கூடி முடிவு செய்திருக்கிறார்கள் என்று அறியவருகின்றது.

04▶

# இலங்கை தொடர்பான ஐ.நா. அறிக்கை: வரவேற்கின்றது ஐரோப்பிய ஒன்றியம்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கையை ஏற்றுக் கொள்வதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் நேற்று ஆரம்பமானது.

இதன்போது, இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் கலந்துரையாடப்



பட்டது.

அந்த அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள உண்மைகளை ஏற்றுக் கொள்வதாகவும், இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

“கடந்த இரண்டு ஆண்டுகளில் நாடு எதிர்கொண்ட சவால்களை நாம் அங்கீகரிக்கின்றோம்.

குறிப்பாக 2022 நிதி நெருக்கடி தொடர்பாக எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நியாயமான மற்றும் ஜனநாயக ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகும் முயற்சிகளை நாங்கள் வரவேற்கின்றோம். மேலும், இந்தச் செயல்முறைக்கு

04▶

# தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை விளக்கும் அறிக்கை ஞாயிறன்று வரும் என்கிறார் மாவை









(கே.வசந்தன்)

ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி (ஞாயிறன்று) அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்தின் வவுனியா இல்லத்தில் தமிழரசுக் கட்சியின் விசேட குழுக் கூட்டம் இன்று காலை நடைபெற்றது. இதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஏற்கனவே சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஏற்கனவே 6 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்தத் தேர்தலில் எமது மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், என்ன அடிப்படையில வாக்களிக்க வேண்டும், அதற்காகக் கட்சி ரீதியான கொள்கை, எமது இனப்பிரச்சினைத் தீர்வு, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பவற்றுக்கு ஆதரவான அறிக்கையை நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த தேர்தல் அறிக்கை காரணமாக வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாக கொள்கை அடிப்படையில் இணக்கம் ஏற்பட்டு, அதில் எங்களுக்கும், அவருக்கும் இணக்கம் ஏற்படக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் அல்லது 15 ஆம் திகதி கூடி ஆராய்ந்து பொது மக்களுக்காக அறிக்கையை வெளியிடவுள்ளோம்." – என்றார்.

இதன்போது, "நீங்கள் ஒரு கட்சியினுடைய தலைவர். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து தாங்கள் கருத்து வெளியிட்டு இருந்தீர்கள். ஆனால், உங்கள் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு என அறிவித்துள்ளது. இது பொதுமக்களைக் குழப்பதா?" – என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

"நாங்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறவில்லை. நான் ஆரம்பத்திலும் கூறிய கருத்து கட்சி கூட்டத்தில் நான் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் எடுத்த தீர்மானம் என்ன என்ற விளக்கம் எனக்குத் தேவைப்பட்டிருந்தது. அப்போது கட்சி முன்வைத்த கருத்தை ஆராய்ந்து அதனை மக்கள் மத்தியில் முன்வைப்போம் எனத்தான் கூறினேன். பத்திரிகை ஒன்று ஏதோ தேடிப் பிடித்து தலைப்புச் செய்தியாக ஒன்றைப் பிரசுரித்ததைப் பார்த்து நான் மாறுபட்டு சொன்னேன் எனக் கூற முடியாது. இப்பொழுதும் கட்சி எடுத்த முடிவு தொடர்பில் பேசினோம். இறுதி முடிவுதான் முக்கியமானது. இன்றும் அதில் என்ன மாற்றங்கள், திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் கதைத்துள்ளோம். அதற்குப் பொருத்தமாக அறிக்கையைப் பொதுமக்களுக்கு வழங்குவோம். கட்சியின் பலம், மக்களின் பலம் என்பவற்றை ஆராய்ந்து ஜனநாயக ரீதியாக அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஏற்ப பொருத்தமான ஓர் அறிக்கையை தேவைப்பட்ட திருத்தங்களுடன் இறுதியாக வெளியிடுவோம். அதுதான் எமது இறுதி அறிக்கையாக இருக்க முடியும். அது பற்றியே பேசி வருகின்றோம்" – என்று மாவை பதிலளித்தார்.



# ஓட்டோவிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு!

(ஆ. ரமேஸ்)

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட என்போல்ட் தோட்டப் பிரிவில் ஓட்டோவிலிருந்து சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கள்கிழமை இரவு என்போல்ட் தோட்ட பொதுமக்கள், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவில் துர்நாற்றம் வீசியதால் ஓட்டோவைப் பார்த்த போது அதனுள் கறுப்புப் பொலித்தீன் உறையில் போடப்பட்டு சிவப்புத் துணியொன்றால் சுற்றி மறைக்கப்பட்ட நிலையில் இருந்த சிசுவின் சடலத்தைக் கண்டு அக்கரப்பத்தனை பொலிஸாருக்கு அறிவித்தனர்.

எனினும், சிசுவின் தாய் தொடர்பிலும், மேற்படி சிசுவின் சடலத்தை அவ்விடத்துக்குக் கொண்டு வந்து விட்டுச் சென்றவர் தொடர்பிலும் எவ்வித தகவல்களும் தெரியவரவில்லை. எனினும், 28 வயதுடைய ஓட்டோவின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

சிசுவின் சடலத்தை இன்று நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தின் நீதிவான் பார்வையிட்டார்.

அதன்பின்னர் சிசுவின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அக்கரப்பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களைத் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நேற்று வெளியிடப்பட்ட வெற்றிடங்களை நிரப்புதல் பட்டியல் மூலம் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், அவர்களைப் பீடாதிபதி அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் அறிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய 2023ஃ2024 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞான பீட மாணவர்களுக்கான திசைமுகப் படுத்தல் நிகழ்வுகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில், வெற்றிடங்களை நிரப்பும் பட்டியல் மூலமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் புதிய மாணவர்களும் 2023ஃ 2024 கல்வியாண்டில் தமது கற்கைகளைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு, புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வில் பங்கேற்குமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார்.

# ஆட்கள் இன்றி இரத்துச் செய்யப்பட்ட சஜித்துக்கு ஆதரவான பிரசாரக் கூட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி – உடுப்பிட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நடைபெறவிருந்த பிரசாரக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டத்தில்மக்களைஅழைத்து வர முடியாது போன நிலையில் முற்பகல் 10 மணி முதல் இசைக் குழுவினர் பாடல் இசைத்தவண்ணம் இருந்துள்ளனர்.

நண்பகல் வரை மக்களை ஒன்று திரட்டுவதில் ஏற்பாட்டாளர்கள் தோல்வி கண்ட நிலையில் இந்தக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இலங்கை தொடர்பான...**

ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றோம்.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் திட்டமிடப்பட்ட உருவாக்கத்தை நாம் நன்கு கவனிக்கும் அதேவேளையில், அதன் பணி பற்றிய தெளிவான பார்வை பெற நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பொறுப்புக்கூறல் மற்றும் உண்மையின் முன்னேற்றம் இல்லாதது குறித்து நாம் தொடர்ந்தும் கவலை கொண்டுள்ளோம்.

குடிமை இடத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அல்லது நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டமூலம் போன்ற புதிய மற்றும் முன்மொழியப்பட்ட சட்டங்களின் செயற்படுத்தல் விளைவுகளை ஏற்படுத்தும்.

கருத்து மற்றும் கருத்துச் சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்கும், சிவில் சமூக ஈடுபாட்டுக்கு முழு இடத்தை வழங்குவதற்கும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கும் இலங்கையை நாம் ஊக்குவிக்கின்றோம்.

இலங்கையில் அமைதியான, ஜனநாயகத் தேர்தலை நாங்கள் விரும்புகின்றோம்." – என்றுள்ளது.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையை வரவேற்று பிரித்தானியாவும் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிரித்தானியா குறிப்பிட்டுள்ளது.

**சஜித்துடன்தான்...**

ஏற்கனவே கட்சியின் மத்திய குழு கூடி இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுத்து அறிவித்துள்ளமை தெரிந்ததே.

கட்சியின் யாப்பின்படி கட்சியின் கொள்கை ரீதியான முடிவை எடுக்கும் உயர் அதிகாரம் மத்திய குழுவுக்கு மட்டுமே உண்டு என்பதாலும் – இனி, இந்தத் தேர்தலுக்கு முன்னர் மத்திய குழு மீண்டும் கூடும் வாய்ப்பு இல்லாமையாலும் – மத்திய குழுவின் முன்னைய தீர்மானத்தை ஒட்டியதாகவே கட்சித் தலைவர்கள் இனிமேல் முடிவை எடுத்து விளக்க அறிக்கையை வெளியிடுவர் என்றும் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தனர்.

"தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுத்து விட்டமையால், அதனை மாற்ற முடியாது, அவருடனேயே தொடர்ந்து பேச வேண்டி இருக்கும்" – என்று இன்றைய கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா கூறினார் எனவும் அறியவந்தது.

சஜித் பிரேமதாஸவின் உறுதிமொழிகளை எழுத்தில் எடுப்பது, அவற்றுக்கு காலவரையறை குறிப்பது போன்றவை குறித்து சஜித் பிரேமதாஸவுடன் தொடர்ந்து உரையாடல்களை மேற்கொள்ளுமாறு இன்றைய வவுனியா கூட்டத்தில் சுமந்திரனுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகவும் அறியவந்தது.

இன்றைய கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட உப தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., சி.சிறீதரன் எம்.பி. ஆகியோர் பங்குபற்றினர்.

இந்தக் குழுவில் மட்டக்களப்பு மாநகர முன்னாள் மேயர் தி.சரவணபவனும் இடம்பெற்றிருந்த போதிலும் இன்றைய கூட்டத்துக்கு அவர் சமூகம் தர முடியவில்லை. எனினும், ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கட்சியின் மத்தியில் குழு எடுத்த தீர்மானத்துக்கு மாறாக எந்த முடிவு எடுக்கப்படக்கூடாது என்ற தமது நிலைப்பாட்டை வலியுறுத்தி கடிதம் ஒன்றை அவர் பொதுச்செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தார் என அறியவந்தது.

மீண்டும் இந்தத் தலைவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி கூடி தமிழ் மக்களுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்தும் அறிக்கையை அங்கீகரித்து வெளியிடுவர் என இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று தெரியவந்தது. எனினும், கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த மாவை சேனாதிராஜா அந்த அறிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதி வெளிவரும் என அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் 15 இலட்சம் ரூபா பெறுமதியான மரங்கள் சிக்கின

**(கே.வசந்தன்)**

ரூபா 15 இலட்சத்துக்கும் அதிக மான பெறுமதியுடைய மரங்கள் இன்று செவ்வாய்க்கிழமை கைப்பற்றப் பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, மகாறம்பைக்குளம், 2ஆம் ஒழுங்கை பகுதியில் சட்ட விரோதமாக வெட்டப்பட்டிருந்த ஒரு தொகை மரங்கள் இருக்கின்றன என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படை யில், வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜயசேகரவின் ஆலோசனையில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலின் அஜந்த பெரேராவின் அறிவுறுத்தலுக்கு அமை வாக, வவுனியா மாவட்ட குற்றத் தடுப் புப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் அழகியவண்ண தலைமையிலான பொலிஸார் துரித நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றைச் சோதனை செய்தபோது அங்கு சட்ட விரோதமாக வெட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்ட ரூபா 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய மரங்கள் மீட்கப்பட்டன.

அத்துடன், மரக்காலை உரிமை யாளர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழ். மோ. சைக்கிள் விபத்தில் ஒருவரின் கால் பாதம் துண்டிப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் விபத்தில் ஒருவரது கால் பாதம் துண்டாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக் கிள் ஓட்டியின் கால் ஒன்று, மோட்டார் சைக்கிளின் செயினுக்குள் அகப்பட்டு, பாதம் துண்டாடப்பட்டுள்ளது




விபத்தையடுத்து காயப்பட்டவரை அவ்விடத்தில் இருந்தவர்களும், பொலி ஸாரும்மீட்டுஅம்புலன்ஸில்யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த துடன், துண்டாடப்பட்ட பாதத்தையும் மீட்டு அம்புலன்ஸில் அனுப்பி வைத்துள்ள னர்.

விபத்து சம்பவம் தொடர்பில் சுன்னா கம் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இது சோதனைக் காலம்

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் பத்து நாள்கள்தான் உள்ளன. பிரசாரத்திற்கு எட்டு நாள்கள் உண்டு.

இந்தத் தேர்தலை ஒட்டி தமிழர் தரப்பின் பிரதான கட்சியான இலங்கை தமிழரசுவின் நிலைமை திரிசங்கு நிலை போன்று காணப்பட்டது. எனினும் இன்று காலை நடைபெற்ற கட்சியின் உயர்மட்டத் தலைவர்களின் கூட்டத்தில் சுமுகமான நிலை எட்டப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி இருக்கின்றது.

ஆயினும், அக்கட்சியை பொறுத்த வரை நிலைமை அப்படி சுமுகமாக நீடிக்கும் என்று நம்ப முடியாது. ஏனெனில், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அண்மைக்காலமாக 'சணம் பித்தம் சணம் வாதம்' என்ற ரீதியில் கருத்து வெளியிட்டுப் பேசி வருகிறார். இன்று காலையில் கூட ஓர் ஊடகத்தில் 'தமிரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் என்ற முடிவு இறுதியானது அல்ல. அது 14ஆம் திகதி நடைபெறும் கட்சியின் அடுத்த மத்திய குழு கூட்டத்தில்தான் இறுதி செய்யப்படும்' - என்று மாவை சேனாதிராஜா கூறினார் எனும் சாரப்பட செய்தி வெளியாகி இருந்தது.

அவரோ, இன்று காலை வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் கூட்டத்தில் 'மத்திய குழு சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முடிவு செய்துவிட்டது. ஆகவே இனி சஜித்துடன்தான் பேச வேண்டும்' - என்று கூறுகிறார். அப்படி கூறியவர் நாளை மீண்டும் 'ரணிலுடனும் பேச வேண்டும்' என்றோ, 'அனுராவுடனும் பேச வேண்டும்' என்றோ பித்தம் மாறி, வாத நிலையில் பேச மாட்டார் எனக் கூறி விட முடியாது.

கட்சித் தலைமை அப்படி இருக்கும் போது கட்சியின் போக்கும் தேர்தல் வரையும் அப்படிக் குழப்பமாகத்தான் நீடிக்கும்.

கட்சித் தலைவர் அப்படி என்றால், கட்சியின் தலைமைக்கு கண் வைத்து, அதற்காகத் 'தமிழ் தேசியம் தன்னிடம் மட்டும்தான் உள்ளது' என்று படம் காட்டும் சிறிதரன் எம்.பியோ கட்சியின் மத்திய குழுவின் முடிவுக்கு மாறாக, சங்குச் சின்ன வேட்பாளருக்காகப் பகிரங்கமாகக் களத்தில் இறங்கி இருக்கின்றார். சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கு சென்றுள்ள கட்சியின் உறுப்பினர் அரியநேத்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய குழுவில் தானும் சேர்ந்து முன்னின்று தீர்மானம் எடுத்து, அவரிடம் விளக்கம் கோரவும், அதுவரை அவரை (அரியநேத்திரனை) கட்சிக் கூட்டங்களுக்கு அழைக்கக்கூடாது என்று முடிவு செய்ய வைத்த சிறிதரன், இப்போது கட்சியின் முடிவுக்கு - மத்திய குழுவின் தீர்மானத்திற்கு - மாறாக பகிரங்கமாகத் தாமும் சேர்ந்து சங்கு ஊதும் பிரசாரத்தை முன்னெடுத்திருக்கின்றார்.

இந்தத் தலைவரையும், தலைவராக வரப் போகின்றவரையும் வைத்துக் கொண்டு தமிழரசு நிமிர்வது என்பது காரிய சாத்தியமானதாகக் காணப்படவில்லை.

போதாக்குறைக்கு கட்சியின் முக்கிய பிரமுகர்கள், கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் தலைகாட்டாமல், கட்சியின் நிலைப்பாட்டை உள்வாங்கிப் பிரதிபலிக்காமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்ட எலும்பு துண்டுகளுக்காக தத்தமது பிரதேசங்களில் அவருக்காக, கட்சியின் முடிவை மீறி, காய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றமை எல்லோருக்கும் தெரிந்த சங்கதிதான்.

ரணிலிடம் கையேந்தியமைக்கு நன்றிக்கடனுக்காக, ஏதோ ஒரு வகையில் ரணிலின் பிரதான எதிர் வேட்பாளரான சஜித்துக்கு வாக்கு விழாமல் பார்க்கும் கைங்கரியத்தை கட்சியை மீறி இவர்கள் பொறுப்பேற்று முன்னெடுக்கின்றார்கள் என்பது திண்ணம்.

இப்படிக் குளறுபடிகளின் கூட்டமாக தமிழரசு இருக்கும்போது இந்த ஜனாதிபதித் தேர்தலை தம் மக்களுக்கு நன்மை தரக்கூடிய ஒரு திசையில் பயன்படுத்துவதற்கு - நகர்த்துவதற்கு - அக்கட்சியால் இயலுமா என்பது சந்தேகமே.

தற்குறிகளை தள்ளி வைத்து, தவிர்த்துத்தான் அக்கட்சிய இனி முன்னேற வேண்டும். இது தமிழரசுக்கு சோதனைக் காலம்தான.




# அம்பாறையில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வரவேற்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

ஜனாதிபதி தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு இன்று செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவருடன் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா. நடராஜா உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.

முதலில் அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள பெரியநீலாவணையில் அரியநேத்திரனுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான முன்னாள் தவிசாளர் கலாநிதி கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் பொன்னாடை போர்த்தி வரவேற்றார் .

ஏனைய தாயக செயலணி உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பு உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

அங்கே முருகன் கோயிலில் சிறப்பு பூஜை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளிலும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.








EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# நீதியான, சுதந்திரமான தேர்தல் இடம்பெற வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவிடம் குகதாசன் எம்.பி. எடுத்துரைப்பு

(ஹஸ்பர் )

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான களநிலவரங்கள் தொடர்பான சந்திப்பொன்று திருகோணமலையில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட பணிமனையில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பானது நேற்று (09) ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர் மைக்கல் பீட்டர்ஸ் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றது.

நீதியான தேர்தல், தேர்தல் வன்முறை சம்பவங்கள், தற்கால அரசியல் நிலவரங்கள் தொடர்பான பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து மாபெரும் பிரசாரக் கூட்டம்

## நாளை சாய்ந்தமருதில் நடத்த ஏற்பாடு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சுயேட்சை வேட்பாளராகக் களமிறங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெற்றிக்கான மாபெரும் தேர்தல் பிரசார கூட்டம் சாய்ந்தமருது கடற்கரை வீதியில் அமைந்துள்ள பௌசி மைதானத்தில் நாளை (11) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

"தீர்வே விடிவு ரணிலே நம் தெரிவு" "வாருங்கள் பலமாவோம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறும் இந்த மாபெரும் மக்கள் பேரணியில், ஜனாதிபதி சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ மற்றும் விசேட அதிதிகளாக கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டு குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1350 ரூபா அடிப்படைச் சம்பளம்!

## செந்தில் தொண்டமான் நன்றி தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர் )

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இன்று முதல் கட்டமாக 1350 ரூபாய் அடிப்படை சம்பளம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.



முதல் கட்டமாகத் தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளமாக 1350 ரூபா வழங்கப்பட்டுள்ள நிலையில், மீதி 350 ரூபாவையும் பேச்சு வார்த்தைகளின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தைப் பெற்றுக்கெடுக்க ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கும் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், இன்று முதல் 1350 ரூபா அடிப்படை சம்பளம் வழங்க பெருந்தோட்ட கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மெய்வல்லுனர் போட்டியில் அல் பஹ்ரியாவுக்கு 4 பதக்கங்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய மாணவர்கள் கிழக்கு மாகாண மெய்வல்லுனர் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களையும்,ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய மாணவன் யூ.எல்.அஸ்ஜத் 57.6 செக்கனில் கடந்து புதிய சாதனையை ஏற்படுத்தி தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

16 வயது ஆண்கள் பிரிவில் எம்.எம். றிஹான் 300 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 42.9 செக்கனில் கடந்து புதிய மாகாண சாதனையுடன் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் ,16 வயது பிரிவில் 400 மீற்றர் அஞ்சல் ஓட்ட போட்டியில் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், 20 வயது ஆண்கள் பிரிவில் 400 மீற்றர் அஞ்சல் ஓட்ட போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டனர்.











# நண்பர்களின் கிரிக்கெட் போரில் தெல்லிப்பளை மகாஜனா வெற்றி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் , தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி பழைய மாணவர் அணிக்கும், யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் அணிகளுக்கிடையே நடைபெற்ற நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படும் ரி 20 கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனா பழைய மாணவர் அணி 130 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பளை மகாஜனா அணி 20 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடி ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் அணி 18.5 ஒவர்களில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தப் போட்டியில் 130 ஓட்டங்களால் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றிபெற்றது.









# அநுரவுக்கு ஆதரவாக சாய்ந்தமருதில் பிரச்சாரம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது வர்த்தக சமூகத்தினர் மத்தியில் தேசிய ஐக்கிய முன்னணி தொண்டர்கள் ஜனாதிபதி தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தப் பிரச்சாரம் இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட, கல்முனை தொகுதி, சாய்ந்தமருது பிரதான வீதியின் வர்த்தக சமூகத் தோழர்களை சந் தித்து ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தேர்தல் பிரச்சாரத்தில் தொண்டர்கள் ஈடுபட்டனர்.





# சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக அக்கரைப்பற்றில் பிரச்சாரம்

(எம்.ஏ. நமீஸ்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து அக்கரைப்பற்று நகர்ப் பகுதியில் பல்வேறு தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.தவம் தலைமையில் பிரசார கூட்டங்கள், மக்கள் சந்திப்புகள் ஆகியன இடம் பெற்று வருகின்றன. தேர்தல் விஞ்ஞாபனம், துண்டுப் பிரசுரங்கள் போன்றனவும் விநியோ கிக்கப்பட்டும் வருகின்றன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெறச் செய்யும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.



# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக திருமலை கச்சேரியில் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

எதிர்வரும் 21 ஆம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான செயலமர்வானது திருகோணமலை மாவட்ட அரச அதி பரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நேற்று (09) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பங்களிப்புகள், கடமைகள், பொறுப்புக் கள் மற்றும் வாக்குப்பதிவுக்கு முன் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் உதவிச் செய லாளரும் அஞ்சல் மூல வாக்கு உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். கே.டி நிரஞ்சன் அவர்களினால் இதன் போது தெளிவூட்டப்பட்டது.

இந்தச் செயலமர்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், மற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர்கள் பலரும் கலந்து கொண் டனர்.







# கல்முனை ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகக் கடமையேற்பு!

(அபு அலா)

கல்முனை மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் திருமதி பிரதீபா பார்த்தீபன் தனது கடமையை நேற்றுப் (09) பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றி வந்த சிரேஷ்ட தரம் 1 இல் உள்ள ஆயுள்வேத வைத்தியர்களுக்கான நேர்முகத்தேர்வு அன்மையில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவால் நடத்தப்பட்டது.

இதில் வைத்தியர் திருமதி பிரதீபா பார்த்தீபன் சித்தியடைந்து கல்முனை மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக நியமனம் பெற்று தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.



# மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்து; ஒலுவிலில் இருவர் படுகாயம்!

(இசட்.ஏ.றஹ்மான் )

ஒலுவிலில் மோட்டார் சைக்கிள் – பஸ் விபத்தில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இன்று (10) காலை 6 மணியளவில் அக்கரைப்பற்று – கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள ஒலுவில் பஷில் லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்முனையில் இருந்து வந்த பஸ் ஒலுவில் பஷில் லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தரித்து நிற்பதற்காக பாதையை கடக்க முற்பட்ட வேளை அக்கரைப்பற்றில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றவரும் குறித்த வீதி;யில் நின்ற மற்றொரு நபரும் காயமடைந்த நிலையில் பொது மக்களால் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை அக்கரைப்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தீயில் எரிந்து நாசமான வாகனம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவை இடமாறும் பகுதியில் வாகனமொன்று இன்று செவ்வாய்க் கிழமை (10) காலை தீப்பிடித்து எரிந்து நாசமாகியுள்ளது.

இதனால் குறித்த பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது என்று வீதி அபிவி ருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தீயை தெற்கு அதிவேக நெடுஞ் சாலை தீயணைப்புப் பிரிவினர் அணைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

இரண்டு பொறியியலாளர்கள் பயணித்த கெப் ரக வாகனம் ஒன்று இன்று (10) காலை தெற்கு அதிவேக வீதியின் கொட்டாவை பகுதியில் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்றின் பொறியியலாளர்கள் இருவர் காலி பிரதேசத்தில் வர்த்தகர்களுக்கான பயிற்சி பட்டறை ஒன்றை நடத்துவதற்காக சென்று கொண்டிருந்த போது, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு பொறியாளர்கள் மற்றும் சாரதியும் வாகனத்தை விட்டு வெளியே வந்தவுடன் வாகனத்தின் முன்பக்கத்தில் இருந்து புகை வந்து தீ விபத்து ஏற்பட் டுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டதையடுத்து உடனடி யாக தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டு தீயை அணைத்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தின் சுமார் 75 வீதமான பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இயந்திரக் கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்து காரணமாக கடுவெலயிலி ருந்து மாத்தறை நோக்கிச் சென்ற வாகனங்கள் சுமார் 15 நிமிடம் நிறுத்தப் பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். அத்துருகிரிய அதிவேக வீதியின் கட்டுப்பாட்டு மத்திய நிலையம் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகிறது.





# தெகிவளை மேம்பாலத்தில் கார் விபத்து!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு காலி வீதியில் தெகிவளை மேம்பாலத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்துக்குள்ளாகியுள்ளது என்று தெஹிவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கார் சாரதியின் கவனக் குறைவே இந்த விபத்துக்குக் காரணம் என தெகிவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். காரை செலுத்திய சாரதி பலத்த காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்து சம்பந்தமாக தெகிவளை பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.




# 'பன்முக நோக்கில் பாரதி' என்னும் நிகழ்வு நாளை!


லிங்காஸ்வர கீதம் வழங்கும் பன்முக நோக்கில் பாரதி என்னும் நிகழ்வு நாளை 11 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு வல்லை வீதியிலுள்ள விக்னேஸ்வரா திருமணமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

லிங்கேஸ்வர கீதத்தின் இயக்குனர் செல்வி ஷாஜிதா அட்ஜெயலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் கணித பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா கலந்துகொள்வார்.

கௌரவ அதிதியாக யாழ்ப்பாண இந்திய தூதர் ஸ்ரீசாய் முரளி கலந்து கொள்வார்.

சிறப்பு அதிதிகளாக நெல்லியடி செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை உரிமையாளர் சண்முகசுந்தரம் பிரேம்குமார் மற்றும் பாடலாசிரியரும் சுயாதீன ஊடகவியலாளரும் கவிஞர் வெற்றி துஷ்யந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பிரபல பாடகி செல்வி கில்மிசா உதயசீலனின் வலையொளியில் பாரதி பாடலும் லிங்கேஸ்வரா கீத கலைஞர்கள் வழங்கும் இசை இழைத்த பாரதி கவியூற்று எனும் இன்னிசை அரங்கும் இடம்பெறும்.

# பெரிய உப்போடை - சீலாமுனை பிரதேசத்தின் பிரதான கழிவுநீர் வாய்க்காலின் அவலநிலை!

## உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று மக்கள் கேள்வி

(அபு அலா )

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பெரிய உப்போடை – சீலா முனை பிரதேசத்தின் பிரதான கழிவுநீர் செல்லும் வாய்க்கால் முழுவதும், கழிவுகள் நிறைந்து மிக மோசமான நிலையில் காணப்படுகிறது.

ஒரு வருடத்துக்கு மேலாக இவ்வாறு காணப்படுகிறது என்று அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ள நீர் வடிந்தோட முடியாமல் வீதிகள் மற்றும் குடியிருப்பு பிரதேசங்கள் முழுவதும் வெள்ள நீரில் மூழ்கி, கழிவுகள் நிறைந்தும் காணப்பட்டது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பாரிய இன்னல்களை எதிர்நோக்கியதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அது மாத்திரமல்லாமல் வீதியால் செல்ல முடியாதளவுக்கும், வீட்டினுள் இருக்க முடியாதளவுக்கும் துர்நாற்றம் வீசுகிறது என்றும் நுளம்பு தொல்லை, பாம்புகளின் நடமாட்டம், டெங்கு நோய் பரவும் அபாயம் என்பன காணப்படுகின்றன என்றும் அந்தப் பிரதேச மக்களும், பயணிகளும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மட்டக்களப்பு மாநகர சபைக்குப் பல தடவைகள் அறிவித்தும், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அசமந்தப் போக்கில் செயற்பட்டு வருகின்றனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் என்.சிவலிங்கம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராகவும் உள்ளார்.

அதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களின் கிழக்கு மாகாண ஆணையாளராக இருக்கும் என்.மணிவண்ணன் உள்ளூராட்சி சபைகளின் அமைச்சின் பதில் செயலாளராகவும் உள்ளார்.

இந்த நிலையில் மக்களது பிரச்சினைகள் தொடர்பில் அவர் கவனம் செலுத்தவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினையை நாங்கள் எங்கு போய்ச் சொல்லுவது என்று தெரியாமல் இருக்கின்றனர் என்றும் அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, உப்போடை – சீலாமுனை பிரதேச மக்கள் ஒரு வருடத்துக்கு மேலாக எதிர்நோக்கி வரும் இந்தப் பிரச்சினைக்கு உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுப்பார்களா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.



# அரியவகை உயிரினமான நன்னீர் நாய் கண்டுபிடிப்பு!

(பாறுக் ஷிஹான்)

நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் ஒன்று கடந்த சனிக்கிழமை (07) பொது மகடகளாலட பிடிக்கப்பட்டு பின்னர் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் அம்பாறை மாவட்டம் கல்முனை நகரில் உள்ள தனியார் வாகன திருத்தும் இடத்தில் இருந்து பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் நீர் நாய் வகையைச் சேர்ந்தது ஆகும். இது தோற்றத்தில் பெரிய உடலைக்கொண்டிருக்கிறது. இது பொதுவாக லெட்ரோகலே இனத்தின் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இது இந்திய துணைக்கண்டத்திலும் மேலும் தென்கிழக்காசியப் பகுதியில் அமைந்துள்ள நாடுகளிலும் காணப்படுகிறது. மற்ற நீர் நாய்களைவிட இதன் மேல் உள்ள முடிகள் குறைவாகவும் மிருதுவாகவும் காணப்படுகிறது.

இவை ஆற்றில் நீந்தி மீன்களை பிடிக்க ஏதுவாக இவற்றின் கால்களில் வாத்துக்களுக்குப் போல விரலிடைத் தோல் உடையன. இவற்றின் பட்டையான நீண்ட வாலானது துடுப்புப் போல் நீந்தப் பயன்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

### வி.சி.க. நடத்தும் மது ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்க

# அ.தி.மு.கவுக்கு அழைப்பு!



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக நடைபெறவுள்ள மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மாநாட்டுக்கு அ.தி.மு.க.வுக்கும் திருமாவளவன் அழைப்பு விடுத்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் இன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். இதன்போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

“ஒக்டோபர் 2ஆம் திகதி - மஹாத்மா காந்தி பிறந்தநாளன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மகளிர் விடுதலை இயக்கம் சார்பில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாடு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

2016 தேர்தல் அறிக்கையில் தி.மு.க. படிப்படியாக மதுவிலக்கை அமலப்படுத்துவோம் என்று உறுதியளித்தது. தி.மு.க.வுக்கும் மதுவிலக்கு கொள்கையில் உடன்பாடு உண்டு. அ.தி.மு.க.வுக்கும் உடன்பாடு உண்டு. இடது சாரி கட்சிகளுக்கும் மதுவிலக்கு கொள்கையில் உடன்பாடு உண்டு. விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் உடன்பாடு உண்டு.

எல்லாக் கட்சிகளும் மதுவிலக்கை வலியுறுத்தும் நிலையில், மதுக்கடைகளை மூடுவதில் தயக்கம் ஏன்? என்பதுதான் எல்லோருடைய கேள்வி.

நல்ல சாராயத்தால் கள்ளச்சாராயத்தை தடுக்க முடியும் என்ற வாதம் ஏற்புடையது அல்ல. சாராயம் என்றாலே அது கேடுதான். நல்ல சாராயம் என்று எதுவும் இல்லை.

உள்ளத்திற்கும், உடலுக்கும் தீங்கானது. சமூகத்திற்கும், தேசத்திற்கும் கேடானது. ஆகவே முழுமையான மதுவிலக்குதான் தீர்வாக இருக்க முடியும்.

மதுவிலக்கை வலியுறுத்துவோருக்கு அதை நடைமுறைப்படுத்த ஏன் தயக்கம்? அ.தி.மு.க.வும் இதைச் சொல்கிறது. ஆனால் அமுல்படுத்தவில்லை. அவர்களும் எங்களுடன் சேரட்டும். இந்த மாநாட்டிற்கு வர விரும்பினால் வரட்டும். எந்தக் கட்சிகளும் வரலாம்” என்றார்.

## தனிப்பட்ட விருப்பம்!



“விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தமது மாநாட்டுக்கு அ.தி.மு.க.வை அழைத்தமை அவர்களின் தனிப்பட்ட விருப்பம்” அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


சிவகங்கையில் முதலமைச்சர் கிண்ணத்துக்கான விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார். அதன்போது அவர்,

“சிவகங்கை மாவட்டத்தில் நடந்துவரும் அரசு திட்டங்களை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம். ஆய்வுக்கூட்டத்தின் அறிக்கைகள் தயார் செய்யப்பட்ட பின்னர் முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நடத்தும் மது ஒழிப்பு மாநாட்டிற்கு அ.தி.மு.க.வை அழைத்தது அவர்களின் தனிப்பட்ட விருப்பம்.

- இவ்வாறு அவர் கூறினார்.

## பங்கேற்பது குறித்து தலைமை முடிவெடுக்கும்



“மது ஒழிப்பு மாநாட்டில் அ.தி.மு.க.வும் பங்கேற்கலாம் என்று திருமாவளவன் அழைப்பு விடுத்திருப்பது பற்றி கட்சித் தலைமை முடிவெடுக்கும்” என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

“மதுஎன்பதுசமுதாயத்துக்குமிகப் பெரிய கேடு. குறிப்பாக தி.மு.க. தேர்தல் வாக்குறுதியில் பூரண மது விலக்குக் கொண்டு வருவோம் என்று குறிப்பிட்டு உள்ளனர்.

அ.தி.மு.க. ஆட்சியின்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் கையில் பதாகையுடன் பூரண மது விலக்கு வேண்டும் என்று கோஷமிட்டுப் போராடினார்.

அதன் பிறகு ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.35 ஆயிரம் கோடியிலிருந்து ரூ.42 ஆயிரம் கோடியாக மதுக்கடை வருமானத்தை உயர்த்தியுள்ளார். குடிக்கிறவர்களின் எண்ணிகையை தமிழ்நாட்டில் அதிகப்படுத்தி ஒரு வரலாறு படைத்ததுதான் தி.மு.க. ஆட்சியின் சாதனை.

அது தோழமையில் உள்ள கூட்டணிக் கட்சிகளுக்கு இப்போது பிடிக்கவில்லை. அதன் அடிப்படையில்தான் அவர்களுக்கு எதிராக முதலில் திருமாவளவன் குரல் கொடுத்திருக்கிறார்.

குரல் கொடுத்தது மட்டுமின்றி ஒரு நல்ல விடயத்துக்காக அவர் மாநாடு நடத்துகிறார். இந்த மாநாடு நல்ல நோக்கத்துக்காக நடைபெறும் மாநாடு என்ற அடிப்படையில் அ.தி.மு.க.வுக்கு ஓர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் கலந்து கொள்வதா? இல்லையா? என்பதை கட்சித் தலைமை முடிவு செய்யும்.”

- இவ்வாறு ஜெயக்குமார் கூறி உள்ளார்.



# இடம்பெயர்ந்த பாலஸ்தீனர்கள் தங்கியிருந்த முகாம் மீது இஸ்ரேல் குண்டுத் தாக்குதல்

# 40 பேர் பலி!

மனிதாபிமானப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட இடத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் போர் தொடுத்துத் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் குழந்தைகள், பெண்கள் உள்பட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், தெற்கு காசாவில் உள்ள கான் யூனுஸ் நகர் அருகே அல்-மவாசிப் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தங்கியிருந்த முகாம்மீது, இஸ்ரேல் இராணுவம் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது. இதில் 40 பேர் பலியானார்கள். 60 பேர் காயமடைந்தனர்.

தாக்குதல் நடந்த இடத்தில் ஆழமான பள்ளங்கள் ஏற்பட்டு அவற்றை இடிபாடுகள், மணல்கள் மூடின. இதனால், மீட்புப் பணியாளர்கள் மண்வெட்டிகளைப் பயன்படுத்தி மணலை அகற்றினர்.

சிலர் கைத்தொலைபேசி ஒளியில் மணலைத் தோண்டுவதற்கு தங்கள் கைகளைப் பயன்படுத்தி மணலில் புதைந்தவர்களை மீட்டனர்.

இதையடுத்து, மனிதாபிமானப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட இடத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆனால், மனிதாபிமானப் பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் பதுங்கியிருந்தனர் எனவும் அவர்களை குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 08

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 10/09/2024

## ஸ்கார்பரோவில் மாணவன் மீது சூடு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 10 ஸ்கார்பரோ அக்னிகோட் கல்லூரியைச் சேர்ந்த 12ஆம் வகுப்பு மாணவர் ஒருவர் நேற்றைய தினம் காலை துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக் 02





# ஒன்றாறியோவில் ஒவ்வொரு மூன்று நாளும் ஒரு சிறார் மரணமடையும் அவல நிலைமை

**கனடாவின் ஒன்றாறியோ மாகாண காப்பக நிர்வாகத்தின் குளறுபடிகளால் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் சிறார் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பகீர் தகவல் வெளியாகியுள்ளது.**

**மாகாண நிர்வாகம் பதிவு செய்திருந்த தரவுகளில் இருந்தே இந்தத் தகவல் அம்பலமாகியுள்ளது.**

**கடந்த 2020 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் சுமார் 354 சிறார்கள் மரணமடைந்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

கனேடிய அரசாங்கத்தின் கீழ் செயல்படும் காப்பகங்களில் வசிக்கும் போதே சிறார்கள் மரணமடைந்துள்ளனர். மட்டுமின்றி சிறார்கள் மரணமடைந்த 12 மாதங்களில் விசாரணையும் முடித்துவைக்கப்பட்டுள்ளது.

தற்போது வெளியாகியுள்ள இந்த தகவல், அரசாங்கம் அதன் அடிப்படையான கடமைகளில் இருந்து தவறியதாகவே சமூக ஆர்வலர்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய அறிக்கைகளில், சிறார்களின் இறப்பு, அதற்கான காரணம், வயது உள்ளிட்ட மொத்தத் தரவுகளும் பதிவாகியுள்ளன.

இந்த விவகாரத்தில் தற்போது மூன்று ஆண்டுகளுக்கான தரவுகள் மட்டுமே வெளியாகியுள்ளன. 2020 இல் காப்பகம் தொடர்பாக 104 சிறார்கள் மரணமடைந்துள்ளனர். 02



# ஒன்றாரியோவில் சிறுவர் நலன்புரிக்கான முகவர் நிறுவனங்கள் குறித்து விமர்சனம்

ஒன்றாரியோவில் சிறுவர் நலன்புரி முகவர் நிறுவனங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஒன்றாரியோ குறைகேள் அதிகாரி விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் உரிய முறையில் பாதுகாப்பான வகையில் தங்க வைக்கப்படவில்லை எனக் குற்றம் சமாத்தப்பட்டுள்ளது.

பொருத்தமற்ற வகையில் ஹோட்டல்கள், விடுதிகள் போன்றவற்றில் சிறுவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சிறுவர்கள் தங்க வைக்கப்படும் போது அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பூரண கவனம் செலுத்தப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 02



# வட்டி வீதம் குறைக்கப்பட்டாலும் கூட வாகனக் கொள்வனவு கூடவில்லை!

வட்டி வீத மாற்றம் வாகன கொள்வனவில் தாக்கத்தை செலுத்தவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கனடிய மத்திய வங்கி வட்டி வீதங்களை குறைத்திருந்தது. வங்கி வட்டி வீதங்கள் தற்பொழுது 4.25 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வங்கி வட்டி வீத குறைப்பானது வாகன தவணை கட்டணங்களை பெரியளவில் பாதிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வங்கி வட்டி வீத குறைப்பானது வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு காத்திருப்போருக்கு பெரிய அளவு ஊக்குவிப்பாக அமையவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மேலும் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டால், வாகனம் கொள்வனவு செய்பவருக்கு நன்மை ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்கள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யும் போது வட்டி வீதங்கள் 8 முதல் 10வீதமாக காணப்படும்.

எதிர்வரும் நாள்களில் வட்டி வீதங்கள் குறைக்கப்பட வாகனக் கொள்வனவு அதிகரிக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.




## ஸ்கார்பரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகி சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

கிளென் வாட்ஃபோர்ட் டிரைவிற்கு அருகிலுள்ள பாடசாலையின் வாகன நிறுத்துமிடத்தின் கிழக்கு முனையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காலை 11:50 மணியளவில் மிட்லாண்ட் அவென்யூ மற்றும் ஷெப்பர்ட் அவென்யூ ஈஸ்ட் அருகே உள்ள பாடசாலைக்குத் தான்கள் வந்தனர் எனவும், இதன்போது 16 வயது சிறுவன் சிறு காயங்களுடன் இருந்தமையைக் கண்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர ரூரல் சாலையில் கிழக்கு நோக்கி நடந்து செல்வதைக் காண முடிந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் 16 முதல் 18 வயதுடைய கறுப்பின ஆண், மெலிதான உடலமைப்பு கொண்டவர் என்று பொலிஸாரால் விவரிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை என்றாலும், சந்தேக நபரும் பாதிக்கப் பட்டவரும் ஒருவருக்கு ஒருவர் தெரிந்திருந்தவர்கள் எனத் தெரிகிறது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

## ஒன்றாரியோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விரிவான அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என ஒன்றாறியோ மாகாண குறைகேள் அதிகாரி போல் டுபே தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அனுமதி பத்திரமற்ற சிறுவர் நலன்புரி நிலையங்களில் சிறுவர்கள் தங்க வைக்கப்படுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல எனவும் அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதுகாப்பற்ற இடங்களில் சிறுவர்கள் தங்க வைக்கப்படுவதனால் அவர்களின் நடத்தை தொடர்பான பிரச்சினைகள் எதிர்காலத்தில் எழக்கூடுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஒன்றாறியோவில் ஒவ்வொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2021 இல் இந்த எண்ணிக்கை 129 என அதிகரித்துள்ளது. 202ஈல் மொத்தம் 121 மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்த மூன்று ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு 118 சிறார்கள் மரணமடைந்துள்ளனர். அதாவது ஒவ்வொரு மூன்று நாள்களுக்கும் சிறார் ஒருவர் மரணமடைந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், சிறார்கள் மற்றும் இளைஞர்களுக்கான ஒன்றாறியோவின் சட்டத்தரணியாக சுமார் பத்தாண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியுள்ள Irwin Elman தெரிவிக்கையில், மாகாணத்தில் உள்ள காப்பகங்களில் உண்மையில் எத்தனை சிறார்கள் மரணமடைந்துள்ளனர் என்பதை கணக்கெடுப்பது என்பது கடினமான விடயம் என்றார்.

2020ல் காப்பகத்தில் இருக்கும் போது 13 சிறார்கள் மரணமடைந்துள்ளனர். ஆனால் 28 சிறார்கள் அவர்களுக்கான அரசு உதவிகள் ரத்து செய்யப்பட்ட 12 மாதங்களில் மரணமடைந்துள்ளனர். இதில் 34 சிறார்கள் அவர்களின் குடும்பத்தினருடன் தங்கியிருக்கும் போது இறந்துள்ளனர்.

குறித்த சிறார்களுக்கு அரசாங்கத்தின் உதவிகள் வழங்கப்பட்டும் வந்துள்ளது. மூன்று வருடங்களிலும் சிறார்களின் மரணத்திற்கான மிகப்பெரிய காரணம் தீர்மானிக்கப்படாததாக பட்டியலிடப்பட்டுள்ளது.

மேலும் மூன்று வருடங்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு இறப்புகள் உறுதி செய்யப்படவில்லை. தற்போது இந்த விவகாரம் தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

மூன்றாண்டுகளில் 354 சிறார்கள் என்பது கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள முடியாதது என்றே சமூக ஆர்வலர்கள் தரப்பில் கூறப்படுகிறது.



# முன்கூட்டிய தேர்தலுக்கு சாத்தியம் மிகவும் குறைவு

## ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் தெரிவிப்பு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 10

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் முன்கூட்டிய தேர்தலைத் தூண்டுவது சாத்தியமில்லை என ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

லிபரல் கட்சியுடனான நம்பிக்கை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக புதிய ஜனநாயகக் கட்சி கடந்த வாரம் அறிவித்தது.

இந்த நிலையில் முன்கூட்டிய தேர்தலுக்கான சாத்தியக்கூறுகள் குறித்து பரவலாக எதிர்பார்க்கப்படு கிறது.

அரசாங்கத்துடன் நம்பிக்கை ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டாலும், லிபரல் சிறுபான்மை அரசாங்கத்திற்கு புதிய ஜனநாயகக் கட்சி தொடர்ந்து ஆதரவு வழங்கும் என டக் போர்ட் குறிப்பிட்டார். பொதுத் தேர்தலைத் தூண்டும் வகையில் பல நம்பிக்கை வாக்கெடுப்புகளுக்கு பியர் பொய்லியெவ் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# லிபரல் கட்சியின் சிறப்பு ஆலோசகராக முன்னாள் கனடிய மத்திய வங்கி ஆளுநர்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 10

லிபரல் கட்சியில் சிறப்பு ஆலோசகராக முன்னாள் கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் மாரக் கார்னே இணைகிறார் .

இது குறித்த அதிகார பூர்வ அறிவிப்பு நேற்று வெளியானது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பிரதமரின் பொருளாதார வளர்ச்சி பணிக்குழுவின் தலைவராக மார்க் கார்னே பணியாற்றுவார் என கட்சியின் அதிகாரப்பூர்வ செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தை கன்சர்வேட்டிவ் கட்சி விமர்சித்துள்ளது.

இந்த நிலையில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடைபெறும் லிபரல் கட்சி நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் மாரக் கார்னே கலந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

அடுத்த சில நாள்களுக்கு அவர் கனடிய பொருளாதாரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உரையாடவுள்ளார்

மார்க் கார்னேயை அரசியலுக்கு அழைத்து வரும் முயற்சியில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஈடுபட்டுள்ளார் என்ற செய்தி கோடை காலத்தில் வெளியானது.



# கூட்ஸ் எல்லை முற்றுகையில் பங்கேற்ற இருவருக்கு ஆறரை வருடங்கள் சிறை!

அல்பேர்ட்டா, செப்ரம்பர் 10

கூட்ஸ் எல்லை முற்றுகையில் பங்கேற்றமைக்காக அல்பேர்ட்டா போராட்டக்காரர்கள் இருவருக்கு ஆறரை வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அல்பேர்ட்டா மாகாணத்தின் கூட்ஸ் என்ற இடத்தில் உள்ள கனடா - அமெரிக்க எல்லை கடவை முற்றுகையிட்டதற்காக இருவருக்கும் ஆறரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தோனி ஒலியெனெக், கிறிஸ் காரபேர்ட் ஆகியோருக்கு எதிராக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் ஏற்கனவே நான்கு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் மீதமுள்ள காலத்தை சிறையில் கழிப்பதற்கு நீதிபதி டேவிட் லப்ரனேஷ் உத்தரவிட்டிருந்தார்.

இவர்கள் இருவரும் பெப்ரவரி 2022இல் கைது செய்யப்பட்டதில் இருந்து காவலில் உள்ளனர். கொவிட்-19 விதிமுறைகள், தடுப்பூசி கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவர்கள் முற்றுகைப் போராட்டத்தை முன்னெ டுத்தனர்.

2022ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டம் இரண்டு வாரங்கள் எல்லைக் கடவையையும் போக்குவரத்தை நிறுத்தியிருந்தது.

முற்றுகைக்கு அருகில் துப்பாக்கிகள், வெடிமருந்துகள், உடல் கவசம் ஆகியவற்றை தேசிய பொலிஸ் பிரிவு கண்டுபிடித்த நிலையில் இவர்கள் இருவருக்கும் எதிராக குற்றச்சாட்டுகள் பதிவாகின.

இந்த முற்றுகையின் போது குற்றம் சாட்டப்பட்ட வேறு இரண்டு எதிர்ப்பாளர்கள் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தமக்கு எதிரான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். கிறிஸ்டோபர் லைசாக்கிற்கு எதி ராக மூன்று ஆண்டுகள் சிறை தண் டனை விதிக்கப்பட்டது.

ஜெர்ரி மொரினுக்கு எதிராக மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.



# பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடாவுக்கு 10 தங்கப் பதக்கங்கள்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 10

2024 பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் பத்துத் தங்கப் பதக்கங்களைக் கனடா வென்றது.

இதனடிப்படையில் பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில. பத்துத் தங்கப் பதக்கங்கள் உட்பட மொத்தம் இருபத்து ஒன்பது பதக்கங்களை கனடா சுவீகரித்தது.

இவற்றில் ஒன்பது வெள்ளி, பத்து வெண்கலப் பதக்கங்கள்.

இதன் மூலம் பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில், 2020 டோக்கியோ பரா ஒலிம்பிக்ஸ் போட்டியை விட அதிகம் பதக்கத்தை கனடா வென்றுள்ளது.

டோக்கியோ பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் இருபத்தியொரு பதக்கங்களை கனடா வென்றிருந்தது.

2016 இலண்டன் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியிலும் கனடா இருபத்து ஒன்பது பதக்கங்களை வென்றிருந்தது.

2012 ரியோ பரா ஒலிம்பிக்ஸ்போட்டியிலும் கனடா முப்பத்து ஒன்று பதக்கங்களை வென்றது.

இம்முறை கனடா வெற்றி பெற்ற 10 தங்கப் பதக்கங்கள் பெய்ஜிங் 2008 போட்டிகளின் பின்னர் கனடா வெற்றி பெற்ற அதிக தங்கப் பதக்கங்களாகும்.

தங்கப் பதக்கங்கள் அடிப்படையில கனடா பதக்கப் பட்டியலில் 12வது இடத்தை இம்முறை பிடித்தது.

பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவுக்கு வந்தது.

இறுதி நாள் நிகழ்வில் கனடிய கொடியை நிக்கலொஸ் பென்னட் மற்றும் பிரியானா ஹென்னெஸ்ஸி ஆகியோர் ஏந்திச் சென்றனர்.



# சிறுபான்மை லிபரல் அரசு தாக்குப் பிடிப்பதற்கு புளொக் கிபெக்குவா கட்சி முண்டு கொடுக்கும்?

ஒன்றாரியோ, செப்ரம்பர் 10

நம்பிக்கை வாக்கெடுப்பின் போது லிபரல் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது குறித்து சாதகமான கருத்துக்களை புளொக் கிபெக்குவா கட்சி வெளியிட்டுள்ளது.

லிபரல் கட்சியுடனான நம்பிக்கை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக கடந்த வாரம் புதிய ஜனநாயக கட்சி அறிவித்தது.

இந்த நிலையில் சிறுபான்மை லிபரல் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது குறித்து புளொக் கிபெக்குவா நாடாளுமன்ற குழுத் தலைவர் கருத்து தெரிவித்துள்ளார்.

லிபரல் அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு ஈடாக கியூபெக் மாகாணத்திற்கு தேவையான ஆதாயங்களைப் பெற தயாராக உள்ளதாக புளொக் கிபெக்குவா கூறுகிறது.

லிபரல் கட்சி சிறுபான்மை அரசாங்கமாக உள்ள நிலை தமக்கு சாதகமானது என புளொக் கிபெக்குவா நாடாளுமன்ற குழுத் தலைவர் அலெய்ன் தெர்ரியன் கூறினார்.

இந்த ஆதரவுக்கு ஈடான கோரிக்கைகளின் பட்டியலை புளொக் கிபெக்குவா தயாரித்துள்ளது.

இவை கியூபெக் மாகாணத்திற்கு தேவையான ஆதாயங்களாக உள்ளன என புளொக் கிபெக்குவா தெரிவிக்கிறது.



# லிபரல் நாடாளுமன்ற குழுவினரின் சந்திப்பு நேற்று பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஆரம்பம்

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரம்பர் 10

ஜஸ்டின் ட்ருடோ தலைமையிலான லிபரல் நாடாளுமன்ற குழுவின் சந்திப்பு நேற்று பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் ஆரம்பமானது.

இதில் விரக்தியான பல நாடாளுமன்ற உறுப்பினர்களை பிரதமர் எதிர்கொள்ளும் நிலைமை தோன்றியுள்ளது.

லிபரல் அரசாங்கத்திற்கான ஆதரவை புதிய ஜனநாயக கட்சி பின்வாங்கியுள்ள நிலையில் நிச்சயமற்ற எதிர்காலத்தை ஜஸ்டின் ட்ருடோ எதிர்கொள்கிறார்.

ஒக்டோபர் 2025 இறுதிக்குள் நடத்தப்பட வேண்டிய தேர்தலில் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி பெரும் வெற்றி பெறும் என அண்மைய கருத்துக் கணிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

புதிய ஜனநாயக கட்சி எடுத்துள்ள முடிவு சில மாதங்களுக்கு முன்னதாக தேர்தலை நடத்தும் சாத்தியக்கூறை தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையில் நடைபெறும் லிபரல் நாடாளுமன்ற குழு சந்திப்பு பிரதானமாக கருதப்படுகிறது.



# ஓஷாவாவில் மோசமான தீயை ஏற்படுத்திய விபத்துக்குக் காரணமானவர் மீது வழக்கு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 10

ஓஷாவாவில் ஒரு பயங்கரமான, தீ விபத்து தொடர்பாக 40 வயதுடைய நபர் மீது பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி பிற்பகல் 12.15 மணியளவில் ரிட்சன் வீதி தெற்கு மற்றும் புளூர் வீதிக்கு அருகில் இடம்பெற்ற இந்த தீ விபத்தில் கடந்த மாதம் ஒன்பது வாகனங்கள் சிக்கின.

டொராண்டோவைச் சேர்ந்த 40 வயது ஆண் ஒருவர் ஓட்டிச் சென்ற கறுப்பு நிற மெர்சிடிஸ் கார், தெற்கு ரிட்சன் சாலையில் 'அதிக வேகத்தில்' சென்று கொண்டிருந்த போது, கர்ப் லேனுக்குள் நுழைந்து 41 வயதான பெண் ஒருவர் செலுத்தி வந்த வெள்ளை நிற நிசான் மீது மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கத்தின் சக்தியின் விளைவாக அந்தப் பெண் செலுத்தி வந்த நிசான் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து, வீதியில் சென்ற ஏனைய வாகனங்களுடன் மோதி தீப்பிடித்தமையால், அப்பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும் 9 பேர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.




# கனடாவில் வீடுகளின் வாடகை 2 ஆண்டுகளில் 22 வீதம் உயர்வு

கனடாவில் வாடகை குடியிருப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் மட்டும் வாடகைத் தொகைகள் 22 வீதத்தினால் அதிகரித்துள்ளன.

ரெண்டல்ஸ்.சீஏ (Rentals.ca) என்ற வீட்டு மனை தொடர்பான இணைய தளம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் இரண்டு தடவைகள் வாடகை தொகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவை மாகாண வாடகை அதிகரிப்பு வழிகாட்டல்களை விடவும் அதிக தொகையில் உயர்த்தப்பட்டன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வீட்டு உரிமையாளர்கள் கூடுதல் அளவில் பணம் சம்பாதிக்க அனுமதிக்கப்படக்கூடாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 அறைகளைக் கொண்ட வீடு ஒன்றின் வாடகை தொகை 1472 டொலர்களாக காணப்பட்டதாகவும் தற்பொழுது அந்த தொகை 1761 டொலர்களாக மாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீடு ஒன்று காலியாகும் போது பொது கட்டுப்பாட்டுக்கு அமையவன்றி தாங்கள் விரும்பிய தொகையில் வீட்டு வாடகை அதிகரிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் அநேகமான வீட்டு உரிமையாளர்கள் வீடுகள் காலியாகும் போது வாடகை தொகையை வெகுவாக உயர்த்திக் கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கனடாவில் போராட்டத்தின் போது பொலிஸைத் தாக்கிய பெண் கைது

கனடாவின் ரொறன்ரோ நகரின் டௌன் டவுன் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மத்தியில் 21 வயதான பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டில் அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு இடையூறு விளைவித்தார் என இந்தப் பெண் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யோங் மற்றும் காலேஜ் வீதிகளுக்கு அருகாமையில் இந்த வெறுப்புணர்வு போராட்டம் இடம் பெற்றுள்ளது.

போராட்டக்காரர்கள் வர்த்தகக் கட்டடம் ஒன்றுக்குள் அத்துமீறி பிரவேசித்தனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொலிஸார் பேராட்டக்காரர்களைத் தடுக்க முற்பட்டுள்ளனர்.




அச்சமயம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் எனவும் பொலிஸாரை தாக்கினார் எனவும் அந்தப் பெண்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



# கனடாவிற்குள் தீவிரவாதச் சந்தேக நபர்கள் நுழைய எவ்வாறு அனுமதிக்கப்படுகின்றனர்?

தீவிரவாத சந்தேக நபர் கனடாவிற்குள் பிரவேசிக்க எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி இக்கேள்வியை எழுப்பியுள்ளது.

அண்மையில் ஐஎஸ் தீவிரவாத சந்தேக நபர் ஒருவர் கனடாவில் கைது செய்யப்பட்டிருந்தார். பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.

20 வயதான முகமட் சஹாஸெப் கான் என்ற பாகிஸ்தானிய பிரஜை இவ்வாறு, கியூபெக் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அமெரிக்கா யூதர்களை இலக்கு வைத்து ஐ எஸ் தீவிரவாத தாக்குதல் நடத்துவதற்கு இந்த நபர் முயற்சித்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் அந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஐ எஸ் தீவிரவாதி எவ்வாறு கனடாவிற்கு வருகை தந்தார் என்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் கான்சர்வேட்டிவ் கட்சி கோரியுள்ளது.

ஏற்கனவே தீவிரவாத தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டு இருந்த தந்தையும் மகனையும் கனடிய பொலிஸார் கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தீவிரவாத சந்தேக நபர்கள் எவ்வாறு கனடாவிற்குள் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்பது குறித்து அரசாங்கம் தகவல்களை அம்பலப்படுத்த வேண்டுமென எதிர்க்கட்சி கோரியுள்ளது.




# சர்வதேச மாணவர்களின் வருகை கனடாவில் பெருமளவில் வீழ்ச்சி!

கனடிய பல்கலைக்கழகங்களில் சர்வதேச மாணவர்களின் அனுமதியில் பாரியளவு வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச மாணவர் அனுமதி 45 வீதமாக குறைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய பல்கலைக்கழகங்களின் தலைவர் கேப்ரியல் மில்லர் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

மாணவர் அனுமதி தொடர்பான விவரங்களை ஆய்வுக்கு உட்படுத்தியதன் பின்னர் இந்த தகவல் வெளியிடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், இவ்விடயம் தொடர்பான மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் எழுந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீடமைப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக சர்வதேச மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்வதை வரையறுக்க அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

எதிர்வரும் இரண்டு ஆண்டு கால பகுதிக்கு வெளிநாட்டு மாணவர்களுக்கான அனுமதி 35 வீதத்தினால் குறைக்கப்படும் என குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் அறிவித்திருந்தார்.

இந்த வரையறைகள் காரணமாக இந்த ஆண்டில் சர்வதேச மாணவர்களின் அனுமதி சடுதியாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

கனடிய கல்லூரிகள் மற்றும் வேறும் கல்வி நிறுவனங்களில் சர்வதேச மாணவர்களின் அனுமதி மேலும் குறைவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.




# மொன்றியலில் 16 இல் இடைத்தேர்தல்: ட்ரூடோவின் அரசுக்கு அடுத்த சோதனை

கனடாவின் மொன்றியலில் நடைபெற உள்ள இடைத்தேர்தல், கனடா அரசியலில் கவனத்தை ஈர்த்து வருகிறது.

கனடாவின் Toronto-St. Paul's தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில், ஆளும் ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி தோல்வியைச் சந்தித்தது.

கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளரான Don Stewart, லிபரல் கட்சியின் கோட்டை என கருதப்படும் அத்தொகுதியிலேயே, லிபரல் கட்சி வேட்பாளரான Leslie Church என்பவரை 590 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடையச் செய்தார்.

Don Stewartஇன் வெற்றி, லிபரல் கட்சிக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது. முப்பது ஆண்டுகளாக அத்தொகுதி லிபரல் வசம் இருந்த நிலையில், தற்போது, கன்சர்வேட்டிவ் கட்சியினர் Toronto-St. Paul's தொகுதியைக் கைப்பற்றியுள்ளார்கள்.

ஆகவே, கட்சியின் தலைமையில் மாற்றம் வேண்டும், ட்ரூடோ பிரதமர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என அவரது கட்சிக்குள்ளேயே குரல்கள் ஒலிக்கத் துவங்கியுள்ளதாக பெயர் வெளியிட விரும்பாத லிபரல் கட்சியினர் சிலர் கூறியிருந்தார்கள்.

இந்நிலையில், கனடாவின் மொன்றியல் தொகுதியில் இம்மாதம், அதாவது, செப்டம்பர் மாதம் 16ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

அந்த இடைத்தேர்தல் கனடா அரசில் கவனம் ஈர்த்துவருகிறது. காரணம், அந்த தேர்தலில் ட்ரூடோ கட்சி தோல்வியடையுமானால், மக்கள் ஆட்சி மாற்றம் தேவை, அதாவது, ட்ரூடோவை வீட்டுக்குப் போகச் சொல்வதாக பொருள் என்னும் ரீதியில் அந்த தேர்தல் பார்க்கப்படுவதால், அந்த தேர்தல் முடிவுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகின்றன.